வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# நற்றிணைப் பாடல்களில் தினை பதிவுகள்

**சீ. லலிதா**

முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழாய்வுத் துறை)

தூய வளனார் கல்லூரி

திருச்சிராப்பள்ளி - 02

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்களில் காணப்படும் பல்வேறு வகையான உணவுகள், தாவரங்கள், விலங்குகள், உயிரினங்கள், விளைநிலங்கள் எனப் பலவகையான நிலைகள் காணப்படுகின்றன. அவற்றில் சிறுதானியங்கள் குறித்தச் செய்திகள் மற்றும் விளக்கங்கள் விரிவாக விளக்கங்கள் பற்றிக் கூறுகிறது. சிறுதானியங்கள் எவை அவை எவ்விதம் பயன்படுகின்றன என்பன தகவல்கள் தரப்பட்டுள்ளது. சிறுதானிய வகை, இலக்கணங்களில் அவை இடம்பெறும் தன்மை செய்யுள்களுடன் எடுத்துக்காட்டி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. சிறுதானியங்களின் நன்மைகள், பயன்கள், தினையின் மருத்துவக் குணங்கள் தரப்பட்டுள்ளது. தினைப் பற்றி அகராதிகள் தரும் விளக்கங்கள் தரப்பட்டுள்ளது. நற்றிணையில் தினை எந்தெந்தப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது என்பதைப் பாடல் அடிகளுடன் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

**கலைச்சொற்கள்**

சிறுதானியம்- small grain,(millets) சோளம் - (maize) இறுங்கு, தினை - ஒரு சாமை, தினைக் கதிர்கள் - fox tale millet

**முன்னுரை**

மனிதனுடைய வாழ்விற்கு அடிப்படையானது உணவாகும். உணவின் மூலமே ஆற்றலை பெறமுடியும். இந்த உணவானது தானியம் (பசயைளெ),

சிறுதானியம் (அடைடநவள), பருப்பு (ிரடளநள) எனப் பலவற்றை கொண்டது. இவையின்றி பழங்கள் (கசரவைள), காய்கரிகள் (எநபநவயடிடநள), கீரைவகைகள், எண்ணைய் வித்துக்கள் போற்றவை மனிதனுக்கு இன்றியமையாததாகும். இதுபோன்ற உணவுகள் இலக்கியங்களில் பரவிக்காணப்படுகிறது. சிறுதானியங்களில் ஒன்றான் தினை நற்றிணையின் எந்தொந்தப் (பதிவு) பாடல்களில் இடம்பெற்றுள்ளது என்பதை எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு அமையவுள்ளது.

**சிறுதானியங்கள்**

சிறுதானியம் என்னும் சொல்லிற்கு ‘புன்செய்த் தாவரம்’ என்று கழதத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. தானியங்களை, அவற்றின் அளவை உறுவத்தை, வடிவத்தை அடிப்படையாகக் கொண்டு பெருந்தானியங்கள், சிறுதானியங்கள், புல்லரிசித் தானியங்கள் என மூன்றாக பகுத்துக் காட்டலாம். நெல், கோதுமை, பார்லி, ஓட்ஸ், மக்காச்சோளம் எனப் பல வகைப்படும். இலக்கியங்களில் பலவகையானத் தானியங்கள் காணப்படுகின்றன.

அவற்றில் சில

| | | |
|---|---|---|
| குதிரைவாலி | kuthiraivali | (barnyard millet) |
| கேழ்வரகு | kelvaragu | (finger millet) |
| பனிவரகு | panivaragu | (millet) |
| சோளம்(இறுங்கு) | solam | (maize) |
| வரகு | varagu | (common millet) |
| தினை | thinai | (bermuda) |
| சாமை | camai | (small millet)) |
| கம்பு | kambu | (pearl millet) |

எனத் தினைகள் பல வகைகள் உள்ளன. சிறுதானியங்கள் யாவும் பறவை மற்றும் விலங்கு இனங்களுக்கு பிரதான உணவாக விளங்குகிறது.

**அகப்பொருளில் தினை**

இலக்கண நூல்களுள் ஒன்றான அகப்பொருள் விளக்கத்தில், அத்திணை இயலில் குறிஞ்சிக்குறிய கருப்பொருள்கள் இடம்பெற்றுள்ளது. இதில்,

"........ ...... ...... ...........
வேரல் ஐவனம் தோரை யேனல்
கறங்கிசை தொண்டகங் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்
...... ...... ........" (அகத்திணை இயல் - நூற். 20)

இந்நூற்பாவில் செறிகுர 'பைந்தினை காத்தல்' தினை பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. அதேபோன்று, முல்லைக்குறிய கருப்பொருளில்

"........... ...... ...... ........
தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை
ஏற்றுப்பறை முல்லை யாழ் சாதாரி
சாமை வரகு தரமுடன் விற்றல்
அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்
...... ....... ...... ...."(அகத்திணை இயல் - நூற். 22)

இந்நூற்பாவில் வரகு, சாமை, முதிரை போற்றவற்றை உண்ணுதல், அவற்றைத் தரமுடன் விற்றல், தானியங்களைக் கட்டுதல், அரித்தல் போனற தொழில்களை மேற்கொண்டுள்ளனர் என்பதனை அறியமுடிகிறது. மருதக் கருப்பொருளில்

"............ ....... ... மருதம்
செந்நெல் வெண்ணெல் அந்நெல் லரிகிணை
மண்றன் ......... ......"(அகத்திணை இயல் - நூற். 23)

என்னும் அகப்பொருள் பாடலில்; நெல் வகைகள் குறித்த தகவல்கள் இடம் பெற்றுள்ளது. அகத்திணை இலக்கணம் கூறும் நூற்பாக்களில் சிறுதானியங்கள் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும்.

**தினை அகராதி பொருள், வகை**

“தினை – ஒரு சாமை: சிறுமை: தினை வகை: ஒருவகைப்புள்: மிகச்சிறிய அளவு: சிறுதானிய வகை: தினைப்புனம் - தினைவிளைபுலம்” (கழதத் தமிழ் அகராதி பக்-545) எனப் பொருள் தருகிறது. தினை பொருவாக மூன்று வகையாகப் பிரிக்கின்றனர். அவை, வெந்தினை, கருந்தினை, மஞ்சல் தினையாகும்.

**சிறுதானியம் - தினை**

தினை என்னும் சொல் பல சொற்களில் வழங்கப்படுகிறது. அவை இறடி, ஏறல், கங்கு, நுவணை சொற்களால் பல இடங்களில் உள்ளது. உலகிலேயே அதிகம் பயிரிடப்படும் இரண்டாவது தானியம் தினையாகும். தினை உற்பத்தியில் சீனா முதலிடம் வகிக்கிறது. இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது. இது தெற்கு ஆசியாவில் சுமார் 10,000 வருடங்களுக்கு மேலாகப் பயிரிடப்பட்டு வருகிறது. தினைக் கதிர்களை fox tale millet என்று கூறுகின்றனர். தினை என்னும் சொல்லிற்கு இறடி, ஏறல், கங்கு என்ற வேறு பெயர்களும் உண்டு.

தினைச் சிறுதானியம் பெரும்பாலும் வறண்ட நிலத்தில் வளரும் தகவமைப்பைப் பெற்றுள்ளது. இவற்றை பயிரிட வடிகால் வசதியுள்ள மணல்பாங்கான மண் வளம் தேவைப்படுகிறது. 70 நாட்களில் கதிர் பிடித்து 90 நாளில் கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராகிவிடும். தமிழ் மாதங்களில் ஆடி, ஆவணி ஆகிய பட்டங்களில் இவை வளர ஏற்ற மாதமாகும். 17 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் ஆண்டு உற்பத்தி 18 மில்லியன் டன்கள் தினை விளைவிக்கப்படுகிறது. நாட்டின் உற்பத்தியில் வளர்ச்சியில் 10 சதவீதம் பங்களிக்கிறது.

**தினையின் பயன்கள்**

உயிர்ச்சத்து கொண்ட தானியம் என்று அழைக்கப்படுகிறது.

- ☐ தினை குறைந்த க்ளைசெமிக் குறியீட்டை கொண்டுள்ள உணவு.
- ☐ இவை நரம்பு மண்டலத்தின் செயல்பாடுகளை மேம்படுத்தக் கூடியது.
- ☐ நரம்புகளுக்கு வலு கொடுத்து முறுகேற்றும் தன்மைக் கொண்டது.
- ☐ பி1 வைட்டமின் ஊட்டச்சத்து.
- ☐ அல்சர் நோயைக் குணப்படுத்தும்.
- ☐ தசை மற்றும் நரம்புகளுக்கு இடையில் செய்தியை பரிமாற்றம் செய்யவும், இதயத்தின் செயல்பாடுகளையும் பாதுகாக்கிறது.
- ☐ அத்தியாவசிய கொழுப்பு, அமிலங்கள் போன்றவையும் உள்ளன.
- ☐ பாஸ்பரஸ், கால்சியம், மெக்னீசியம், இரும்பு, துத்தநாகம், புரதம் போன்ற பல தாதுப் பொருட்கள் உள்ளது.
- ☐ குடல் புண், வயிற்றுப் புண்பளை குணமாக்கும் செறிதமானத்தை மேம்படுத்தும்.
- ☐ நார் சத்து நிறைந்துள்ளது.
- ☐ தினை இட்லி, தினைப்புட்டு, தினைப்பொங்கல், தினைக்கஞ்சி, தினை மாவு, தினை லட்டு, தினை உப்புமா, தினை முறுக்கு போனட்ற உணவுப் பொருட்கள் செய்யவும் பயன்படுகின்றன.
- ☐ 100 கிராம் தினையில் 331 கலோரிகள் உள்ளது.
- ☐ மேலும் பல உணவுப்பொருட்கள் செய்யவும் பிரதான உணவாக உள்ளது.

இதுபோன்று, பல்வேறு வகையான சத்துக்களும் பயன்களும் சிறுதானியங்களின் ஒன்றான தினை தானியத்தில் நிறைந்துள்ளது. இலக்கியங்களில் பல்வேறு பாடல்களில் தினைப் பற்றிய தகவல்களும் பயன்களும் இடம்பெற்றுள்ளது. நற்றிணையில் காணப்படும் தினைக் குறித்த பதிவுகளைக் காணலாம்.

**நற்றிணை பாடல்களில் தினை**

நல்ல ஒழுக்கலாறுகளைக் கூறுவது எனும் பொருள்பட 'நற்றிணை' எனும் பெயர் சூட்டப்பபட்டது. சங்கத் தொகை நூல்களில் இந்த நற்றிணை எனும் நூல் முதலிடம் பெற்றிருக்கிறது. இதில் 7அடிகள் முதல் 13அடிகள் வரை உள்ளது. பாடல்கள் திணை அடிப்படையில் பார்க்கும் போது குறிஞ்சித்திணைப் பாடல்கள் 130 ஆகும்;. பாலைபாடல்கள 107, நெய்தல்பாடல்கள் 101, மருதப்பாடல்கள் 33, முல்லைப்பாடல்கள் 28. இவை அனைத்தும் உரிய பொருளின் அடிப்படையில் படைக்கப்பட்டவை.

1. கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை(22-1) - நல்வேட்டனார்
2. நீடிலை விளைதினைக் கொடுங்கால் நிமிரக்(44-6) – பெருங் கோசிகனார்
3. தினையுண் கேழல் இரியப் புனவன்(119-1) – பெருங்குன்றூர் கிழார்
4. மென் தினை நெடும்போர் புரிமார்(125-11) – கச்சிப் பேட்டுக் கதக்கண்ணனார்
5. பெறுகுறி செய்த வரையகச் சிறுதினைச்(134-3) – கருவூர்க் கதப்பிள்ளையார்
6. தேம்படு சாரற் சிறுதினைப் பெருங்குரல்(147-2) – கொள்ளம் பாக்கனார்
7. சிறுதினை காக்குவம் சேறும் அதனால்(156-5) – கண்ணங்கொற்றனார்
8. செங்கே ழாடிய செழுங்குரற் சிறுதினைக்(213-9) - கச்சிப் பேட்டுப் பெருந்தச்சனார்
9. நீடினை விளைமோ வாழிய தினையே(251-11) – மதுரைப் பெருமருதன் இளநாகனார்
10. உணங்குதினை துழவுங் கைபோன் ஞாழல்(267-4) – கபிலர்
11. வாரன் மென்றினைப் புலவுக்குரல் மாந்தி(304-1) – மாறோக்கத்து நப்பசலையார்
12. தந்தை விந்திய மென்தினை பைபயச்(306-1) – உரோடகத்துக் கந்தரத்தனார்

13. கொய்பதம் கொள்ளும்நாம் கூஉம் தினையே(313-11)- பொற்கொல்லன் வெண்ணாகனார்
14. தொடுதலை வாங்கிய நீடுகுரற் பைந்தினை(317-3) - பூவண்டி நாகன் வேட்டனார்
15. தினைகிளி கடியும் பெருகல் நாடன்(328-3) - தொல் கபிலர்
16. சிறுதினை வியன்புனம் காப்பின்(351-8) – மதுரைக் கண்ணத்தனார்
17. வணர்குரற் சிறுதினை கடியல்(373-8) – கபிலர்

நற்றிணையில் தினைப்பற்றிய குறிப்புகள் 17 இடங்களில் இடம்பெற்றுள்ளது.

**முடிவுரை**

இலக்கியங்களில் சிறுதானியங்கள் பற்றியப் பதிவுகள் பல இடங்களில் காணப்படுகிறது. அவற்றில் குறிப்பாக அக இலக்கியங்கள், புற இலக்கியங்களில் நிறைந்துக் காணப்படுகின்றன. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான நற்றிணையில் சிறுதானியங்களின் பதிவுகள் பரவலாக இடம்பெற்றுள்ளது. குறிப்பாக சிறுதானியங்களின் ஒன்றான தினை நற்றிணை பாடல்களில் 17 இடங்களில் இடம் பெற்றுள்ளது. சிறுதினை, பைந்தினை, மென்தினை, உணங்குத்தினை, தினை எனப் பலப் பெயர்களில் இடம் பெற்றுள்ளதை இக்கட்டுரையில் காணனமுடிகிறது.

**மேற்கோள்கள்**

1.கழக ஆசிரியர்கள், கழகத் தமிழ் அகராதி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை- 1

2.துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. செவ்விலக்கியக் கருவூலம் - 7, நற்றிணை - 1,2,3,4 தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை - 17, பதிப்பு, 2008.

3.கோவிந்தராச முதலியார் கா.ரா, அகப்பொருள் விளக்கம், கழக வெளியீடு, பதிப்பு -16ம் 2002

4.கூகுள் வலைத்தளம்.